2017ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 23ந் தேதி வியாழக்கிழமை காலை 10.30 மணிக்கு ஆணையாளர் மற்றும் தனி அலுவலரால் நடத்தப்பட்ட கூட்டம்

23.2.17

ஆணையாளர் & தனி அலுவலர்
ஈரோடு மாநகராட்சி.

23)

1. ஈரோடு மாநகராட்சியில் 01.04.2010 முதல் காலியாக இருந்த ஒரு உதவிசெயற்பொறியாளர் பணியிடத்திற்கு 2010–11ஆம் ஆண்டிற்கு 11.01.2011ம் தேதி வெளியிடப்பட்ட தேர்ந்தோர் பட்டியலில் வரிசை எண்.1–ல் திரு.து.கு.ரவிச்சந்திரன், உதவிபொறியாளர் பெயரும் வரிசை எண்.2–ல் திரு.பி.பாஸ்கர், இளநிலை பொறியாளர் பெயரும் வைத்து வெளியிடப்பட்டது. இப்பட்டியலின்படி வ.எண்.1–ல் உள்ள திரு.து.கு.ரவிச்சந்திரன், உதவிபொறியாளர் என்பவருக்கு பதவிஉயர்வு வழங்க மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்பட்டு மாமன்றத் தீர்மான எண்.171, நாள்.28.04.2011–ல் அனுமதி வழங்கப்பட்டு உதவிசெயற்பொறியாளராகப் 13.06.2011–ல் பதவிஉயர்வு வழங்கப்பட்டு விட்டது.

மாநகராட்சிப் பணிவிதிகள் வெளியிடப்பட்டுள்ள அரசாணை எண்.237–ல் அட்டவணை 1 பத்தி எண்.8B(1)–ல் கூறப்பட்டுள்ள அறிவுரையில், ஏற்கனவே தேர்ந்தோர் பட்டியல் வெளியிடப்பட்டு அப்பட்டியல் அரசிடமோ அல்லது மாமன்றத்திலோ ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தால் அவர்களை விடுத்து மீதமுள்ளவர்களுக்கு பணிமூப்பு பட்டியல் வெளியிடலாம் எனக் கூறப்பட்டுள்ளது.

தற்போது இம்மாநகராட்சியில் 07.08.2014 முதல் ஒரு உதவிசெயற்பொறியாளர் பணியிடம் காலியாக உள்ளது. இப்பணியிடத்தை மேலே கூறப்பட்டுள்ள பணிவிதிகளில் வெளியிடப்பட்டுள்ள அறிவுரையின்படி, 2010–11ம் ஆண்டில் 11.01.2011–ம் தேதி வெளியிடப்பட்டு மாமன்றத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தேர்ந்தோர் பட்டியலில் வரிசை எண்.2–ல் உள்ள திரு.பி.பாஸ்கர் இளநிலைபொறியாளருக்கு உதவிசெயற்பொறியாளராகப் பதவிஉயர்வு வழங்க 2016–17ஆம் ஆண்டிற்கு தேர்ந்தோர் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது. அதன்படி திரு.பி. பாஸ்கர், இளநிலைபொறியாளருக்கு காலியாக உள்ள உதவிசெயற்பொறியாளர் பணியிடத்திற்கு பதவிஉயர்வு வழங்கவும் அரசின் உறுதியாக்கம் பெறவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்பட்டது.

மாமன்றத் தீர்மானம் எண்.472, நாள்.14.06.2016–ல் மேற்படி பொருளை ரத்து செய்ததைத் தொடர்ந்து திரு.எம்.கோபிநாத், உதவிபொறியாளர் என்பவர் 19.08.2014–ல் வெளியிடப்பட்ட உதவி/இளநிலை பொறியாளர்களுக்கான தற்காலிக பணிமூப்பு பட்டியலை கருத்தில் கொள்ளாமல் 2016–17ஆம் ஆண்டிற்கு வெளியிடப்பட்ட தேர்ந்தோர் பட்டியல் தவறு எனவும், மேற்படி பணிமூப்பு பட்டியலின்படி திரு.எம்.கோபிநாத், உதவிபொறியாளருக்கு பதவிஉயர்வு வழங்க வேண்டும் என்றும் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து W.P.No.20370/2016, W.M.P.No.17489 & 17490/2016 தடையாணை பெற்றிருந்தார். மேலும், சென்னை உயர்நீதின்ற வழக்கு W.P.No.32571/2016–ல் 19.08.2014–ல் வெளியிடப்பட்ட உதவி/இளநிலை பொறியாளர்களுக்கான தற்காலிக பணிமூப்புப் பட்டியலை ஆணையாளர் ஈரோடு மாநகராட்சி அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எண்.4818/2014/சி1, நாள்.03.06.2016–ல் ரத்து செய்யப்பட்டதற்கு எதிராக தடையாணை கோரி வழக்கு தொடர்ந்ததில் வழக்கு எண். W.P.No.20370/2016 –ல் வழங்கப்பட்ட தடையாணையை நீட்டிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் 19.08.2014ல் வெளியிடப்பட்ட உதவி/இளநிலை பொறியாளர் தற்காலிக பணிமூப்பு பட்டியலை ரத்து செய்து வெளியிட்ட 03.06.2016ஆம் நாளிட்ட செயல்முறை உத்தரவை எதிர்த்து தொடர்ந்த சென்னை உயர்நீதிமன்ற வழக்கு எண்.W.P.No.32571/16-ஐ திரு.எம்.கோபிநாத் உதவிபொறியாளர் திரும்ப பெற்றுவிட்டதால்(Withdrawn) மேற்படி வழக்கு எண்ணில் பிறப்பிக்கப்பட்ட தடையாணை நீக்கம் செய்யப்பட்டுள்ளது. மேலும், W.M.P.No.17490/16-ல் பிறப்பிக்கப்பட்ட தடையாணையையும் நீக்கம் செய்து 13.02.2017–ல் உத்தரவிடப்பட்டுள்ளது. அதற்கான நகல் பெறப்பட்டுள்ளது.

மாநகராட்சி வழக்கறிஞர் திரு.எம். இராஜா மதிவாணன் சென்னை உயர்நீதிமன்றம் அவர்களிடமிருந்து பெறப்பட்ட 13.02.2017ஆம் நாளிட்ட சட்ட கருத்துரையில், திரு.பி.பாஸ்கர், இளநிலை பொறியாளருக்கு பதவிஉயர்வு வழங்குவதற்கு தடை ஏதுமில்லை என தெரிவித்துள்ளார். எனவே, பணிவிதிகளின்படி, 2016–17ஆம் ஆண்டிற்கு வெளியிடப்பட்ட தேர்ந்தோர் பட்டியலின்படி, திரு.பி.பாஸ்கர் இளநிலை பொறியாளர் என்பவருக்கு காலியாக உள்ள உதவிசெயற்பொறியாளர் பணியிடத்திற்கு வழக்கு எண். W.P.No.20370/2016–ன் இறுதி தீர்ப்பிற்கு உட்படுத்தி பதவிஉயர்வு வழங்கவும் அரசின் உறுதியாக்கம் பெறவும் தனிஅலுவலரின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு :–</u>

பணிவிதிகளின்படியும், 2016–17ஆம் ஆண்டின் தேர்ந்தோர் பட்டியலின்படியும், திரு.பி.பாஸ்கர் இளநிலை பொறியாளர் என்பவரை காலியாக உள்ள உதவிசெயற்பொறியாளர் பணியிடத்திற்கு வழக்கு எண். W.P.No.20370/2016–ன் இறுதி தீர்ப்பிற்கு உட்படுத்தி பதவிஉயர்வு வழங்கி அரசின் உறுதியாக்கம் பெற அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.சி1/4818/2014

23) [illegible]

24)

2. ஈரோடு மாநகராட்சியின் மண்டலம்-2 மற்றும் 4-க்குட்பட்ட பகுதிகளில் உள்ள கீழ்க்கண்டுள்ள 31.03.2017 உடன் உரிம காலம் முடிவடையும் குத்தகை இனங்களுக்கு 01.04.2017 முதல் 31.03.2020 முடிய மூன்றாண்டு காலத்திற்கு பொது ஏலம்/ ஒப்பந்தப்புள்ளிகள் 15.02.2017 அன்று நடைபெற்றது. மேற்படி ஏலத்தில் கலந்து கொண்டு கீழ்க்கண்டவாறு உச்ச ஏலக் கேள்வித் தொகை கோரியுள்ளார்கள்.

| வ. எண். | ஏல இனம் | உச்ச ஏலக் கேள்வித் தொகை கேட்ட ஏலதாரர்கள் விவரம் திருவாளர்கள். | 2016-2017-ம் ஆண்டு உரிமத் தொகை | உச்ச ஏலக் கேள்வித் தொகை |
|---|---|---|---|---|
| 1. | வைஸ் சேர்மன் டி.வீரபத்திர சாலையில் அமைந்துள்ள சுதந்திர தின வெள்ளி விழா மாநகராட்சி பழைய பேருந்து நிலையம் மற்றும் புதிய பேருந்து நிலையத்தில் வந்து செல்லும் பேருந்துகளுக்கு கட்டணம் வசூலிக்கும் உரிமம் | ஏ. செல்வராஜ் | ரூ.24,93,224- | ரூ.26,22,000- |
| 2. | பேருந்து நிலைய வணிக வளாக செல்லார் பகுதி இரு சக்கர வாகனங்களுக்கு கட்டணம் வசூலிக்கும் உரிமம் | எம். தாஜ்தீன் | ரூ.19,31,580- | ரூ.19,42,000- |
| 3. | மாநகராட்சி பேருந்து நிலையத்தின் வடபுறம் வி.சி.டி.வி. சாலையின் தென்புறம் சுற்றுச் சுவரின் உள்ளே மாநகராட்சியால் அமைக்கப்பட்டுள்ள சுமார் 188x34 ச.அடி நீள அகலம் உள்ள சிமெண்ட் கூரை ஷெட் உள்ள இடத்தில் சைக்கிள் மற்றும் இரு சக்கர வாகனங்கள் நிறுத்துமிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | எஸ். அருள்குமார் | ரூ.10,19,813- | ரூ.10,21,000- |
| 4. | நேதாஜி சாலை வணிக வளாகத்தின் தரைத்தளப் பகுதியில் (செல்லார்) இரு சக்கர வாகனம் நிறுத்துமிடத்திற்கு கட்டணம் வசூலிக்கும் உரிமம் | எம். பகுருதீன் அசேன் அலி | ரூ.6,63,320- | ரூ.6,65,000- |

| | | | | |
|---|---|---|---|---|
| 5. | மாநகராட்சி ஆடு வதை செய்யும் இடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் (Slaughter House) | கே. குணசேகரன் | ரூ.4,60,845- | ரூ.4,80,000- |

மேற்காணும் ஏல உரிம இனங்களுக்கு ஏலதாரர்களால் கேட்கப்பட்டுள்ள உச்ச ஏலக் கேள்வித் தொகையானது, 2016-2017-ம் ஆண்டு உரிமத் தொகையை விட கூடுதலாக உள்ளது. எனவே மேற்படி உச்ச ஏலக் கேள்வித் தொகையினை ஏற்றுக் கொள்ள அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு :-</u>

அனுமதி வழங்கலாம்.

கோப்பு எண். அ1/160/2016

24)

25)

3. ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட மூன்றாண்டு குத்தகை இன 240 கடைகளுக்கு அரசாணை எண். 92, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள். 03.07.2007–ன்படி 9 ஆண்டுகளுக்கான உரிமக்காலம் 30.06.2016 உடன் முடிவடைந்து விட்டது. மேற்படி கடைகளுக்கு அரசாணையின்படி மேலும் 9 ஆண்டுகளுக்கு குத்தகை வாடகை மறுமதிப்பீடு செய்யப்பட, வெளிச்சந்தை மதிப்பிலான (Market rate) திருத்தியமைக்கப்பட்ட குத்தகை வீதத்தில் மேற்கொண்டு 9 ஆண்டுகளுக்கு குத்தகை கால அளவு நீட்டித்துக் கொள்ள முன்னுரிமை அளிக்கலாம் எனவும், தற்போதைய உரிமதாரர் ஒப்புக்கொள்ளவில்லை என்றால் பொது ஏலத்தில் விடப்பட வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பார்வை 2–ல் காணும் அரசு செயலர் கடிதத்தில் ஏற்கனவே உள்ள கடைகள் மற்றும் நிலங்களுக்கு அரசு ஆணை வெளியிடுவதற்கு முன்னர் அவர்கள் எத்தனை ஆண்டுகள் குத்தகை உரிமம் அனுபவித்திருந்தாலும் அரசு ஆணை (நிலை எண்) 92, வெளியிட்ட நாளான 03.07.2007–ல் இருந்து முதல் கட்டமாக 9 ஆண்டுகளும், பின்னர் மறு மதிப்பீட்டிற்கு பின் அடுத்த 9 ஆண்டுகள் குத்தகை நீட்டிப்பு வழங்கலாம் எனவும் கருதப்படுகிறது என்பதை அரசு உறுதி செய்கிறது என தெளிவுரை வழங்கப்பட்டுள்ளது.

பார்வை 3–ல் காணும் கடிதத்தில் குத்தகை காலம் 9 ஆண்டுகள் முடிவுற்ற அசையா சொத்துக்களுக்கு அங்காடி மதிப்பீட்டின்படி குத்தகை வாடகை மறு நிர்ணயம் செய்யப்படும் போது மாநகராட்சி ஆணையரை தலைவராகக் கொண்டு குழு ஏற்படுத்தப்பட்டு, அச்சொத்துக்களுக்கான நில மதிப்பீட்டினை பதிவுத் துறையிலிருந்து பெற்று பொதுப்பணித்துறையால் நிர்ணயம் செய்யப்பட்ட விகிதப்படி வாடகை நிர்ணயம் செய்து, அதனை அரசாணைப்படி அங்காடி மதிப்பீட்டில் நிர்ணயம் செய்த வாடகையினை ஒப்பிட்டு சரிபார்த்து நிர்ணயம் செய்யப்பட வேண்டும் என நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களால் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

அதன்படி மாத வாடகை மறு நிர்ணயம் செய்யப்பட்டு, பார்வை 3–ல் காணும் 30.12.2016–ம் தேதிய 6 எண் தீர்மானத்தில் அனுமதிக்கப்பட்டு, இம்மாநகராட்சிக்குட்பட்ட வணிக வளாக 240 கடைகளுக்கு பார்வை 4–ல் காணும் செயல்முறை உத்திரவில் 01.07.2016 முதல் 31.03.2019 முடிய மூன்றாண்டு கொண்ட தொகுப்பு காலத்திற்கு உரிமம் நீட்டிப்பு செய்து உத்தரவு வழங்கப்பட்டது.

மேற்படி 240 கடைகளில் 215 கடை உரிமதாரர்கள் புதிதாக நிர்ணயம் செய்யப்பட்ட வாடகை, உயர்வுத் தொகை மற்றும் வித்தியாசத் தொகையை செலுத்தவும் கடையை தொடர்ந்து நடத்தவும் ஒப்புக் கொண்டு சம்மதக் கடிதம் கொடுத்துள்ளார்கள். பேருந்து நிலைய முதல் தளம் ஏ பிளாக் உரிமதாரர் திரு. பி. ரகுநந்தன் என்பவர் வாடகை அதிகமாக உள்ளது என சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு எண். W.P. No. 1997/2017–ல் வழக்கு தொடர்ந்துள்ளார். வழக்கு விசாரணையில் உள்ளது. மீதமுள்ள கீழ்க்கண்ட 24 கடைக்காரர்கள் மாநகராட்சி வசம் ஒப்படைக்க கடிதம் கொடுத்துள்ளனர்.

| வ. எண். | கடை எண் | உரிமதாரர் பெயர் |
| --- | --- | --- |
| 1. | பேருந்து நிலைய வணிக வளாக முதல் தளக் கடை எண். பி பிளாக் (ஹால்) | திரு. ஆர். சந்திரசேகரன் |
| 2. | பேருந்து நிலைய வணிக வளாக முதல் தளக் கடை எண். பி பிளாக் (ஹால்) | திரு. ஆர். சந்திரசேகரன் |
| 3. | பேருந்து நிலைய வணிக வளாக முதல் தளம் (மேற்குபுறம்) கடை எண். 3 | திரு. பி. சங்கர் |
| 4. | பேருந்து நிலைய வணிக வளாக முதல் தளம் (மேற்குபுறம்) கடை எண். 4 | திருமதி. பி. கலாமணி |
| 5. | பேருந்து நிலைய வணிக வளாக முதல் தளம் (மேற்குபுறம்) கடை எண். 5 | திரு. ஆர். வேலுசாமி |
| 6. | பேருந்து நிலைய வணிக வளாக முதல் தளம் (மேற்குபுறம்) கடை எண். 6 | திரு. ஏ.பி. நல்லசிவம் |
| 7. | பேருந்து நிலைய வணிக வளாக முதல் தளம் (மேற்குபுறம்) கடை எண். 8 | திரு. என். குணசேகரன் |
| 8. | பேருந்து நிலைய வணிக வளாக முதல் தளம் (மேற்குபுறம்) கடை எண். 10 | திரு. டி.எஸ். ஈஸ்வரபூபதி |
| 9. | காவேரி ரோடு வணிக வளாக முதல் தளம் கடை எண். 1 | திரு. சக்திவேல் |
| 10. | காவேரி ரோடு வணிக வளாக முதல் தளம் கடை எண். 2 | திரு. தமிழ்செல்வன் |
| 11. | காவேரி ரோடு வணிக வளாக முதல் தளம் கடை எண். 3 | திரு. டி.என். சுப்பிரமணியம் |
| 12. | காவேரி ரோடு வணிக வளாக முதல் தளம் கடை எண். 4 | திரு. எஸ். வெள்ளியங்கிரி |
| 13. | காவேரி ரோடு வணிக வளாக முதல் தளம் கடை எண். 5 | திரு. எஸ். செல்வராஜ் |
| 14. | காவேரி ரோடு வணிக வளாக முதல் தளம் கடை எண். 6 | திரு. கே. பாலமுருகன் |
| 15. | காவேரி ரோடு வணிக வளாக முதல் தளம் கடை எண். 7 | திரு. ஆர்.கே. சண்முகவேல் |
| 16. | காவேரி ரோடு வணிக வளாக முதல் தளம் கடை எண். 8 | திரு. எம். சக்திவேல் |
| 17. | காவேரி ரோடு வணிக வளாக முதல் தளம் கடை எண். 9 | திரு. சி.கே. குழந்தைசாமி |
| 18. | காவேரி ரோடு வணிக வளாக முதல் தளம் கடை எண். 10 | திரு. சி.கே. குழந்தைசாமி |
| 19. | காவேரி ரோடு வணிக வளாக முதல் தளம் கடை எண். 11 | திரு. எம். அருள்ஜோதி |
| 20. | காவேரி ரோடு வணிக வளாக முதல் தளம் கடை எண். 12 | திரு. பகவதி |
| 21. | காவேரி ரோடு வணிக வளாக முதல் தளம் கடை எண். 13 | திருமதி. எம். நந்தினி |
| 22. | காவேரி ரோடு வணிக வளாக முதல் தளம் கடை எண். 14 | திரு. பி. லோகநாதன் |
| 23. | காவேரி ரோடு வணிக வளாக முதல் தளம் கடை எண். 15 | திரு. ஏ.எம். மீராமைதீன் |
| 24. | காவேரி ரோடு வணிக வளாக முதல் தளம் கடை எண். 16 | திரு. எம். சாதிக்பாட்ஷா |

மேற்கண்டுள்ள 24 கடைகளின் உரிமத்தை ரத்து செய்து பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு :</u>

அவசர அவசியத்தை முன்னிட்டு உடன் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடத்தி மேற்படி கடைகளை உடன் ஒப்படைக்க வேண்டியுள்ளதால் முன் அனுமதி பெற்று அலுவலக நடவடிக்கை மேற்கொண்டமைக்கு அங்கீகாரம் வழங்கலாம்.

) [illegible]

# ERODE CITY MUNICIPAL CORPORATION

**Dated** 23.2.2017 

26) **4.** ஈரோடு மாநகராட்சிப் பகுதிகளில் 4 எண்ணிக்கை பூங்கா அமைக்கும் பணிகள் ரூ.264.00 லட்சம் மதிப்பீட்டில் அம்ருத் திட்டத்தின் கீழ் 2016–17 கீழ்கண்ட நிதி ஆதாரங்களுடனும் மற்றும் நிபந்தனைகளுக்குட்பட்டும் மேற்கொள்ள ஒப்புதல் வழங்கி மேலாண்மை இயக்குநர் டுபிட்கோ, சென்னை அவர்களின் கடிதம் எண்.TUFIDCO/AMRUT/1946/AM(M)/2017 நாள்.17.02.2017–ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி வரப்பெற்ற நிபந்தனைகளின் விபரம்

1. Erode Corporation is authorizing the Commissioner to borrow the GOI and GoTN grant of Rs.184.80 lakhs under the Atal Mission for Scheme for the following project as per the terms and conditions prescribed by TUFIDCO.

(Rs in Crore)

<table>
<tr><th colspan="3">Name of the Project</th><th rowspan="2">Approved Cost</th><th rowspan="2">GOI Share (50%)</th><th rowspan="2">GTN Share (20%)</th><th rowspan="2">ULB Share (30%)</th></tr>
<tr><th>Sl. No.</th><th>Name of the work</th><th>Project Cost</th></tr>
<tr><td>1</td><td>Providing park and play felid in ward No.4 at Revenue Colony</td><td>64.53</td><td rowspan="5">2.64</td><td rowspan="5">1.32</td><td rowspan="5">0.528</td><td rowspan="5">0.792</td></tr>
<tr><td>2</td><td>Providing Green Space and Park in Ward no.17 at Sengunthar Nagar</td><td>90.00</td></tr>
<tr><td>3</td><td>Providing Green Space and Park in Ward no.34 at Lakshmi Garden</td><td>69.67</td></tr>
<tr><td>4</td><td>Providing Green Space and Park in Ward no.46 at Kakanji Nagar</td><td>39.80</td></tr>
<tr><td></td><td>Total</td><td>264.00</td></tr>
</table>

2. The Erode Corporation agrees the terms and conditions mentioned in the sanction letter and agrees to execute the project as per the AMRUT guideline.
3. Further the Council of Erode Municipal Corporation will take necessary steps for implement / maintenance of the parks through PPPP mode.

மேற்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு மேற்படி நிதி ஆதாரங்களின் கீழ் அம்ருத் திட்டத்தின் கீழ் இம்மாநகராட்சியில் நான்கு எண்ணிக்கை பூங்காக்கள் அமைக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–**

அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.இ1/1613/2016

26)

23.2.2017